மரபுக் கவிதைச் சிறப்பிதழ்

2019
மே

இதழ்
04

# நெய்தல்



ஆசிரியர் : முல்லை அமுதன்




மரபுக் கவிதைச் சிறப்பிதழ்

# நெய்தல்


## ஆசிரியர் : முல்லை அமுதன்

**படைப்புகளுக்கும் ஆலோசனைகளுக்கும்**

R.Mahendran
34 Redriffe Road,
London,
E13 0JX, UK

**மின்னஞ்சல்**

neythal34@gmail.com


ஓவியங்கள் – இணையம்

வடிவமைப்பு – எல்.வஸீம் அக்ரம்

**படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பாளிகள்**

# ஆசிரியர் பக்கம்

2019
மே

இதழ்
04

மரபுக் கவிதைச் சிறப்பிதழ்

நெய்தல்

ஆசிரியர்
**முல்லை அமுதன்**

வணக்கம்,
நீண்ட இடைவெளியாயிற்று.
நாம் நிதானித்துப் பயணிக்கவேண்டிய
சிற்றிதழ்ப்பயணம்.
கனவுகளோடே ஆரம்பித்து கனவுகளாய்
ஆகிவிடக்கூடாதென்பதே பெருவிருப்பம்.
புலம்பெயர் வாழ்வுச் சூழலுக்குள்
படைப்புக்களைக் கொண்டுவருதலே நம்
இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளலுக்கான
முயற்சியே.
மேலும்,
கவிதைகான களம் மாறுபட்டு
வந்தாலும்,பழமையையும் விட்டுவிடக்கூடாது
என்கிற ஏக்கமே மரபுக்கவிதைச் சிறப்பிதழுக்கான
வருகையாகும்.கல்வி,புலம்பெயர் வாழ்வு,
பிறமொழி இலக்கியம் மீதான ஆர்வம் என
பல்வேறு காரணங்களால் கவிதை பல்வேறு
வடிவங்களையும் தொட்டு நிற்கிறது.அதனால்தான்
நெய்தல் மொழிபெயர்ப்புக் கவிதைச் சிறப்பிதழை
வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக
மரபுக்கவிதைச் சிறப்பிதழை
வெளியிடுகின்றது.புலம்பெயர் நாடுகளில்
கவிதைக்கான இதழ்கள் வந்திருக்கலாம்.அவை
நமது பார்வைக்குக் கிடைக்காத நிலையில்
அவை தொடர்ச்சியாக வருகின்றனவா என்கிற
தேடலும் நமக்குள் உண்டு. இந் நிலையில்
நெய்தல் கவிதை இதழ் ஆரம்பிக்கப்பட்டது.
தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையுடன் ..
தொடர்ந்து உங்கள் படைப்புக்களை
அனுப்புங்கள்.படைப்பாளர்களே நமது பலம்.
புடைப்பாளர்களே நெய்தலை தொடர்ந்து வர
உதவுவார்கள் என நம்புவோம்.

நட்புடன்,

**முல்லை அமுதன்**

கவிஞர் ராம்க்ருஷ்

கவிதைகள் – 2

## எழுதுகோல் (பேனா)

ஓய்வெடுக்கிறது எழுதுகோல் கண்மூடியே
ஆய்வுக்காக நிமிர்ந்து நிற்கிறது அடைப்பான்
பாய்ந்து வரும் எண்ணங்களின் வடிகாலாய்
சாய்ந்து நிற்கும் தாள்கள் வாங்கிக் கொள்ளும்

சிந்தனைகளைச் சிற்பங்களாய் செதுக்கிடவே
சொந்த ஆகுதியை வண்ணங்களாய்க் கரைத்து
பந்தமான தாள்களின்மீது நர்த்தனமாடுகிறது
விந்தைமிகு கருத்துகளை விதைத்திடுகிறது

கவிஞனின் ஊன்று கோலாய் அவன் ஆணையில்
குவிந்த உதடுகளால் தாள்களை முத்தமிட்டே
தவித்த ஆசைகளை அதனுள்ளே இறக்கி இறக்கி
புவிமீதிலே புதுமைப் பாலமிட துணையாகிறதே

காதலில் குளிர்ந்தும் நனைந்தும் கும்மாளமிடும்
சாதனைச் சிகரத்தில் ஏறி நின்று எக்காளமிடும்
சோதனைக் காலத்து வலிகளை வகைப்படுத்தும்
நாதனைத் தொழுது நரம்பெல்லாம் ஆன்மிகமாகும்

குற்றங்கள் கண்டால் வெடித்துச் சிதறித் துடிக்கும்
சுற்றங்களின் விருப்பு வெறுப்புகளை வடிக்கும்
அற்ற குளத்துப் பறவை போலே ஆற்றாமையாகும்
கற்ற வித்தைகள் அத்தனையயம் காட்டிடுமே

சாதி மத பேதங்களைச் சதிராடிக் கனைக்கும்
நாதியற்றோர்க்கு ஆதரவுக் கரங்கள் நீட்டிடும்
வாதிகளின் வழக்குகளை எடுத்து நடத்திடும்
ஆதியோடு முடிவுவரை வீர வாழ்வும் வாழுமே.

# இயற்கையை விரும்பு

தென்றல் காற்று தீண்டிய இன்பம்
மாசுக் காற்றில் மறைந்துபோனதே

முழுநிலவொளி நிலாச் சோற்றின்பம்
பாஸ்ட்புட் பரிதவிப்பில் பலியானதே

பசுந்தாள் உரமிட்ட காய்கனிகளின் அருமை
மரபுமாற்ற உர மாற்றத்தால் அழிந்ததே

அடர்காடுகளால் பொழிந்த பெருமழை
மர வெட்டல்களில் மறைந்து போனதே

ஆற்றுப்படுகைகள் தந்த வண்டல்கள்
வீடுகள் எழுப்பலால் திரிந்து மறைந்ததே

நன்செய் புன்செய் நிலங்களின் செழுமை
நிலங்கள் வீடுகளாகி மறைந்தே போனதே

வற்றாத நதிகளுக்கு ஆதாரமே மணல்கள்
சுரண்டி எடுக்கப்பட்டதாலே அழிந்ததே

இயற்கையை ஆராதிக்க மனமில்லாத
செயற்கைக்கு மாறியதே காரணமல்லவா

செயற்கையைப் போற்றிய மேலைநாடுகளே
இயற்கைக்கு மாறும் மனந்திருந்திய நிலை

இயற்கையை நாமும் விரும்புவோம் என்றும்
இயற்கையோடு இயைந்தே வாழ்ந்திடுவோம்.



## கவிஞர் ராம்க்ருஷ்



# விருந்துக்குவந்த கவிதை


சோளகக் காற்றை வரவேற் கின்றது
சாயுங் கால அந்திப் பொழுது
காற்றுப் புசுபுசு வென்றே அந்தியின்
காதோ ரத்திலே கதைபே சியபடி
சற்று மண்ணையும் அள்ளி யெறிந்து
அந்தியின் மீது சில்மிஷஞ் செய்தது!

எனது சொற்களைத் தேடிப் பார்த்தேன்
சொற்களைக் காணேன் எங்கே என்றன்
எதுகை எங்கே? மோனை எங்கே
எல்லாம் ஓடி எங்கோ ஒழிந்தன!

அகத்துக் கண்ணுள ஆசை யானது
அந்திக் கால அழகு பற்றிய
கவிதை யொன்றைப் புனைந்திட லென்பதாம்

எனதில் லத்தின் வேலிக் கப்பால்
படர்ந்து கிடந்தது பச்சை வண்ணப்
பசுந்தோப் பொன்று அப்பசுந் தோப்பில்
முந்திரி கைபனை தெங்கு எனமரம்
கலந்து இருந்தன காய்த்துங் குலுங்கின

மரங்களில் அமர்ந்து மாலைக் கிள்ளைகள்
மிழற்றிடும் இனிய மெலோடிக் கிணங்க
களிநடம் புரிந்தது காற்று, கிளைக்கரம்
கொட்டி நகைத்தன! குழுமிய மரங்கள்!



மரங்கள் எங்ஙனம் கர்ப்ப முற்றன?
கர்ப்ப முற்றிடக் காரணன் யாரோ?
காயைக் கனியை ஈன்ற வண்ணம்
காட்சி தருதலும் கைக்கு வருதலும்

விந்தைதான் இந்த விரிகிளை மரங்கள்
எந்த விந்தினால் எய்தன தாய்மை?

மர்ய முக்கொரு மழலையைக் கொடுத்த
இறைவனுக் கிந்த மரஞ்செடி கொடிக்கு
கனிகளைக் கொடுப்பது கடின மல்லவே!

அந்திப் பொழுதினை இந்த மட்டினில்
தந்த கவிதை அகவலைச் சார்ந்தது
தோப்பினுட் கங்குல் நுழையவும் அகவல்
யாப்பினுள் நின்று யான் யாத்த கவிதையும்
முற்றிய கனியென விருந்துக்கு வந்ததே !

**முகம்மது அலி**
(ஏ.எம்.எம்.அலி)
18--07--2018.

(எதுகை, மோனைகளைக் கருத்திற் கொள்ளாது எழுதப்பட்ட அகவற் பாவிது. அன்னை மரியம் அவர்களுக்கு ஈஸா நபி (அலை) பிறந்த கதை யாவரும் அறிந்ததே)



# சிந்தனையும் மின்னொளியும்!

– அ.ந.கந்தசாமி (கவீந்திரன்) –

சாளரத்தின் ஊடாகப் பார்த்திருந்தேன் சகமெல்லாம்
ஆழ உறங்கியது அர்த்த ராத்திரி வேளையிலே,
வானம் நடுக்கமுற, வையமெல்லாம் கிடுகிடுக்க,
மோனத்தை வெட்டி யிடியொன்று மோதியதே!
சட்“ டென்று வானம் பொத்ததுபோல் பெருமாரி
கொட்டத்தொடங்கியது. “ஹோர்“ ரென்ற இரைச்சலுடன்
ஊளையிடு நரியைப் போல் பெருங்காற்றும் உதறியது.
ஆளை விழுத்திவிடும் அத்தகைய பேய்க்காற்று
சூறா வளியிதுவா உலகினையே மாய்க்க வந்த
ஆறாத பெருஊழிக் காலத்தின் காற்றிதுவா?
சாளரத்துக் கதவிரண்டும் துடிதுடித்து மோதியது.
ஆழிப்பெரும் புயல்போல் அல்லோலம் அவ்வேளை
உலகம் சீரழிவிற்ற(து) அப்போ வானத்தில்
மாயும் உலகினுக்கு ஒளிவிளக்கந் தாங்கிவந்த
காயும் மின்னலொன்று கணநேரம் தோற்றியதே.
கொட்டுமிடித்தாளம் இசைய நடம் செய்யும்
மட்டற்ற பேரழகு வான்வனிதை போல் மின்னல்
தோன்றி மறைந்ததுவே சிந்தனையின் தரங்கங்கள்
ஊன்றியெழுந்தன இவ் வொளிமின்னல் செயல் என்னே?
வாழ்வோ கணநேரம் கணநேரம் தானுமுண்டோ?
சாவும் பிறப்புமக் கணநேரத் தடங்குமன்றோ?



ஜனனப் படுக்கையிலே ஏழைமின்னல் தன்னுடைய
மரணத்தைக் கண்டு துடிதுடித்து மடிகின்ற
சேதி புதினமன்று அச் சேதியிலே நான் காணும்
சோதி கொளுத்திச் சோபிதத்தைத் செய்துவிட்டு
ஓடி மறைகிறது வாழும் சிறு கணத்தில்
தேடி ஒரு சேவை செகத்திற்குச் செய்ததுவே!
சேவையதன் மூச்சு அச்சேவை யிழந்தவுடன்
ஆவிபிரிந்து அகல்வானில் கலந்ததுவே!
என்னே இம் மின்னல(து) எழிலே வென்றிருந்தேன்.
மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒரு சேதி சொல்லும்.
வாழும்சிறு கணத்தில் வைய மெலாம் ஒளிதரவே
நாளும் முயற்சி செய்யும் நல்லசெயல் அதுவாகும்.
இந்த வாறாகச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன்.
புந்தி நடுங்கப் புரண்டதோர் பேரிடி நான்
இந்த உலகினிற்கு வந்தடைந்தேன் என்னுடைய
சிந்தனையால் இச்சகம்தான் சிறிதுபயன் கண்டிடுமோ? -

(அறிஞர் அ.ந.கந்தசாமியின் ஆரம்பகாலக் கவிதையிது.
ஈழகேசரியில் வெளிவந்தது.)

# நான் நானாவேன்

பாடுவது நான் அல்ல
பாட்டின் அர்த்தமும் நானல்ல
ஓடுகின்ற நதியும் நானல்ல
வெறும் காகிதமும் நானல்ல



பேசும் தமிழும் நானல்ல
விடுதலைக் குரலும் நானல்ல
பாசு பதமும் நானல்ல
பாதகச் செயலும் நானல்ல

வாடிய மனிதனும் நானல்ல
வாதாடும் வக்கீலும் நானல்ல
நொடி சொல்பவனும் நானல்ல
நொந்து அழுபவனும் நானல்ல

நானல்ல நானல்ல ஆனாலும்
நாட்டின் அரசன் நானாவேன்
கூனல் கொண்டவன் ஆனாலும்
கூர்மை யானவன் நானாவேன்

மண்ணைக் கிளறுபவன் ஆனாலும்
மண்ணோடு வாழ்பவன் நானாவேன்
எண்ணத்தில் உயர்ந்தவன் ஆனாலும்
தலைப்பாரம் அற்றவன் நானாவேன்

உண்ணத் தருபவன் நானேயானாலும்
ஒப்பற்ற பணிபுரிபவன் நானாவேன்
கண்ணனைத் தோழனாய்க் கொண்ட
ஒப்பற்ற விவசாயி நானேயாவேன்

---------------------------------------------------- கரவைக்கவி

# நூற்றாண்டாய் மொழியில் வாழுகின்ற நூதனம்

ஒளிவீசுகின்ற கண்களுடன் இவ்வுலகினை வலம் வந்தவராம்
உவகையுடன் தமிழினையே உலகமொழியுடன் ஒப்பிட்டவராம்
விழிகளெனத் தாய்மொழியை விரும்பிக்கற்று மிளிர்ந்தவராம்
விடுதலை வீரர்களைப்போல் வீறுநடைகொண்டு நடந்தவராம்
வழியாக நமக்கெல்லாம் நல்லவரங்கள் பெற்றுத் தந்தவராம்
வாழ்நாள் சாதனையாளரை நாம்வாழும்வரை போற்றுவோம்..

எழிலான எம்தேசம் பெற்ற இணையில்லாத் தமிழ்மகனாம்
ஈன்றமண்ணின் பெருமைதனை எடுத்தியம்பிய பெருமகனாம்
மொழிப்பற்றால் தமிழாராச்சி மாநாட்டினை மொழிந்தமகனாம்
மொத்தமாய் மொழிகள்பதினாறை முயன்று கற்ற வல்லவராம்
தெளிவாக உரையாற்றிடும் தேர்ச்சிகள்பெற்ற விரிவுரையாளராம்
திரட்டியகல்வியை தேசத்துக்கு விதைத்தவரைப் போற்றுவோம்..

களிப்போடு மலர்முகமாய் நிதம் காட்சிதருகின்ற பெருமகனாம்
கத்தருக்காய் கனிந்து பணிசெய்த கத்தோலிக்க மதகுருவாம்
செழிப்போடு தமிழ்வளர்ந்திட சேவைகள் ஆயிரம்செய்தவராம்
சென்றிட்ட தேசமெல்லாம் சிறப்பான பலபதவிகள் வகித்தவராம்
துளியேதும் பிசகிடாத தூய மதத்துறவியாய் மிளிர்ந்தவராம்
தூங்காது பணிமுடித்து துலங்கிநின்ற தீபத்தை போற்றுவோம்..

வழியான எங்களின் மொழியினை வரமாக எமக்களித்தவராம்
வரைந்திட்ட நூல்களிலெல்லாம் வைரமாய் வாழ்கின்றவராம்
செழிப்பாகத் தமிழ் தளைக்க சீர்கள்செய்து விளங்கியவராம்
சீனம் இலத்தீன் கிரேக்கமென சிறப்பாய் மொழிகள்பயின்றவராம்
வெளிநாடுகளிலெல்லாம் தமிழ்மொழின் வேர்களைத் தேடியவராம்
வேற்றுமொழியில் தமிழின்வீரியத்தை உரைத்தவரைப்போற்றுவோம்..

**- அம்பலவன்புவனேந்திரன்..**



## விடுதலை

கொட்டியே கிடக்கின்ற குறைவற்ற வளமனைத்தும்
வெட்டியே தகர்க்கின்ற விளையாட்டைத் தடுத்தாங்கு
எட்டிடில் விடுதலையாம் இயற்கைத்தா யவளுக்குக்
கொட்டிடும் மாண்பென்று கொள்.

ஏழைகள் உழைப்பினையாம் இரவுபகல் உறிஞ்சிடுவோர்
சூழவே பெரும்செல்வம் சுகபோகம் பெறுகின்றார்
வாழவே துடிப்போர்க்கு வழங்கிடில் விடுதலையாம்
மாழுமாம் துயரங்கள் வா!

போட்டியும் அழுக்காறும் புரள்கின்ற நிலைமாற்றி
நாட்டினை வளர்த்திடவே நலத்திட்டம் பலவாக்கிப்
போட்டிகள் இலையென்ற பெருவாழ்வே விடுதலையைக்
காட்டிடும் வழியென்று காண்!

பேசிடும் மொழிபார்த்துப் பிறப்புதனைப் பழித்திங்கு
வீசிடும் முடைநாற்றம் விடுபட்டே யழிந்திடவும்
மேதினி நலம்பெறவே விடுதலையை விதைத்திடுவீர்
சோதியே முகிழ்ந்திடுமாம் சூழ்ந்து!

**கவிஞர் வ.க. பரமநாதன்**
**(பா வகை - வெண்கலிப்பா).**

# தாகம்



ஒற்றுமை என்பது வெற்றித்திருமகள்
நெற்றியிலிட்ட திலகம் - தமிழ்ப்
பற்றினைக் கொண்டெழு ஒன்றெனச் சேர்ந்திடு
கிட்டிடும் வாழ்வி லுதயம் - உயர்
நற்றமிழோ உந்தன் நாவில் புரளினும்
இரத்தத்திலே கொண்டவீரம் - அதை
விற்றிடவோ விலைபேசிடவோ உந்தன்
சொத்தில்லை பாரம்பரியம்

வேற்றுமை விட்டணி செல்வாய் அதுவுந்தன்
வாழ்வினுக்கோர் அத்திவாரம் -இன்னும்
சுற்றி மனங்கொண்ட செந்தீ எழுந்துயிர்
கொள்ளும் சுதந்திர தாகம் - வெறும்
புற்றினில் சீறிடும் பாம்பின் விசம்விடப்
பொல்லாவெறியரின் மோகம் - இனி
முற்றும் எனத்துயர் கொள்வதை கண்டிட
முன்னெழுந்தார் இவர் வீரம்

பற்றிஎரியும் அடிவயிற்றி லெழும்
பாசமிகுந் திவர்போலும் - பல
கற்றிடும் மாணவர் உள்ளம் கண்டதீயும்
காற்றினிலே பெரிதாகும் - தீயைப்
பெற்றிடும் செந்தமிழ் செல்வங்களேஇனி
முற்று மெரிந்திடும் நீசம் - நீவிர்
ஏற்றிடும் தியாகத்தின் தீயும் சுதந்திரம்
வெற்றிவரை தொடரட்டும்

செங்குருதி சிந்தப் பெண்களுயிரைக்
குடித்தவன் பஞ்சணை மீதும் - அவன்
தங்கமுடி தலைகொண்டர சாளவும்
தாழ்ந்து நலிவதோ நாமும் - இனி
சங்கு ஒலித்திடப் பொங்கியெழுந்தவர்
சந்தண மார்பெடு தீரம் கண்ணே
பொங்குமிதற்கொரு பாதைவிடு இது
புத்தொளி காணுமோர் தாகம்

கிரிகாசன்



# மரபுக்கவிதை காலத்தால் முந்தியது.

**சிறீ சிறீஸ்கந்தராசா**

செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது என உறுதிபடக் கூறலாம்.

மரபு என்றால் என்ன?

“எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே”
(நன்னூல்  நூற்பா எண் : 387)

“அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்”

மரபுகள் ஒருபொதுவான தளத்தில் ஒரு நீட்சியை,
தொடர்ச்சியைக் கொண்டிருந்தாலும் எப்போதும்
ஒரே மாதிரியாக இருந்ததில்லை.

கால ஓட்டத்தில் புதியன புகுந்தும் பழையன கழிந்தும் மரபு தன்னைப் புதுப்பித்துக் கொண்டே நகர்ந்தது.

அவ்வாறான எங்கள் மரபின் ஒரு கூறாக எங்கள் கவிதை மரபும் திகழ்கிறது.

தமிழில் ஆரம்ப காலத்தில் இருந்து இலக்கியத் துறையில் கவிதையே முக்கியமானதாக திகழ்ந்ததால் கவிதை மரபையே இலக்கிய மரபாகவும் காணலாம்.

செய்யுள் என்பது வெவ்வேறு யாப்புக்களால் ஆக்கப்பட்டிருப்பது.

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.
(நன்னூல் 268)

பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல்
- தோல், இரத்தம் , இறைச்சி மேதை, எலும்பு , மச்சை , சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல, பல சொல்லால் பொருட்கு இடன் ஆக
- இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல்
என்னும் நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாக, உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் - கல்விஅறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச்செய்வன செய்யுளாம்.

அச்சு ஊடகம் இல்லாத தொன்மையான காலத்தில் செவிவழியில் செய்யுளை மனனம் செய்வதன் மூலம் அவ்வவ் விடயங்களை ஞாபகத்தில் வைத்திருந்து அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்துதற்கு செய்யுள் ஊடகம் உதவிற்று.

செய்யுள் என்பது கவிதையல்ல. என்றாலும் காலத்துக்கு காலம் தேவைக்கு ஏற்ப செய்யுள்களின் வகைகள், அதன் வடிவம் என்பன மாற்றத்துக்கு உள்ளாகி எமது கவிதையைத் தாங்கி வந்திருக்கின்றன.

ஒரு விடயத்தை, ஒரு காட்சியை, ஒரு சம்பவத்தை,
ஒரு அனுபவத்தை, ஒரு நுண்உணர்வை,
ஒரு சிந்தனைப் பொறியை அழகோடும், நேர்த்தியோடும்,
பேசுகிற அதே நேரம் அதனூடு ஒரு அறத்தை, உண்மையை, வாழ்வியலின் தாற்பரியங்களில் ஒன்றை அல்லது பலதைக் காட்டுவதாக அமைவது கவிதை

மேலும், இவ்விடயங்களை ஒரு புதிய, முன்பில்லாத எவரும் நினைத்திராத கற்பனையின் மூலம், வெவ்வேறு உத்திமுறைகளைக் கையாள்வதன் மூலம், இரசிகர்களுக்கு வாசகர்களுக்கு புதிய புரிதலை, "இதை நாம் இப்படிப் பார்க்கவில்லையே" என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்தி அவர்களின் உணர்ச்சியைக் கிளறி, பின் அதை ஆற்றுப்படுத்தி, ஏதோ ஒரு பரவச நிலைக்கு, மனப்பாங்கு மாற்றத்துக்குக் கொண்டு செல்வதும் கவிதையின் இயல்பு ,பண்பு, சமூகப் பொறுப்பு எனலாம்.

கவிஞனும் ஒருவகையில் விஞ்ஞானிதான்.
இயற்கை, உலகம், வாழ்க்கை, பிறப்பு இறப்பு, இவ்வாறான
இன்னும் இன்னும் எத்தனையோ ஏற்கனவே மறைத்து வைத்த எண்ணற்ற புதிர்களை தன் நுண்அவதானிப்பில் கண்டு,
அவற்றைத் துலக்கி, அவற்றின் சூக்குமங்களை விடுவித்து, சாதாரணர்களும் புரிந்து தெளிவு கொள்ளக் கூடியதாக, அவர்களுக்குக் கலங்கரையாக கவிதை விளங்க வேண்டும்.

**கவிதையின் ஓசைச் சுவை இன்று அவசியமில்லை என்றும், அச்சு யுகம் வந்ததால் கவிதையின் ஓசையை இரசிக்கவோ, சுவைக்கவோ, அதை மனனம் செய்யவோ வேண்டியதில்லை என்றும் புதுக்கவிதையாளர்கள் கூறுகிறார்கள்.**

இதுவே கவிதைக்கான அடிப்படை.
இதற்கு மேலாக உவமானம், உவமேயம், உருவகம், படிமம்,
போன்ற அணிகளின் பிரயோகம் கவிதையின் அழகை,
சுவையைப் பெருக்கும்.

யாப்பு என்பது ஓசையை அடிப்படையாக கொண்டது.
சில யாப்புகளுக்கு தனித்தன்மையான ஓசைகள் உண்டு.

கவிதையில் உள்ளூற இருக்கின்ற ஓசைநயம், ஓசைஒழுங்கு கவிதைக்கு அவசியமானது.

எந்த ஓர் சொல்லுக்குள்ளும் இந்த அசைகளால் ஆன இயல்பான ஒலி பொதிந்துள்ளமை மிகப்பெரிய ஆச்சர்யம் தான்.

மிகப்பெரிய ஆச்சர்யம் தான்.

இந்த ஓசை சீராக ஒழுங்குபடுத்தப்படும் போது கவிதைக்குரிய உயிர் ஓசைப் பண்பு உருவாகிறது.

தொல்காப்பியம், யாப்பருங்கலக் காரிகை போன்ற பழந் தமிழ் நூல்கள் தமிழ்க் கவிதை யாப்பைப் பற்றி மிக விரிவாக ஆழமாகப் பேசுகின்றன.

1.அகவல்பா அல்லது ஆசிரியப்பா ஒருவர் பேசுவது போன்றது அகவல் ஓசையுடையது. உ-ம் கந்தசஸ்டி கவசம்

2.வெண்பா இருவருக்கிடையேயான உரையாடல் போன்றது செப்பல் ஓசையுடையது. உ-ம் நளவெண்பா

3.கலிப்பா தாழ்ந்தும் உயர்ந்தும் செல்லும் ஓசையுடையது துள்ளல் ஓசை. உ-ம் பாரதியின் குயில்பாட்டு

4.வஞ்சிப்பா தாழ்ந்த ஓசை தூங்கல் ஓசை

மேற்சொன்ன பாவகைகள் ஒவ்வொன்றும் மூன்று இனங்களைக் கொண்டிருக்கின்றன.அவை
தாழிசை
துறை
விருத்தம்

கவிதையின் ஓசைச் சுவை இன்று அவசியமில்லை என்றும்,
அச்சு யுகம் வந்ததால் கவிதையின் ஓசையை இரசிக்கவோ, சுவைக்கவோ, அதை மனனம் செய்யவோ வேண்டியதில்லை என்றும் புதுக்கவிதையாளர்கள் கூறுகிறார்கள்.

புதிய சிந்தனைகள், புதிய விடயங்கள், புதிய கோட்பாடுகள், எமது மொழிக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

அதற்காக தமிழ்க் கவிதையின் தனித்துவமான பண்புகளை நாம் ஏன் முற்றாக புறக்கணிக்கவேண்டும்.

கவிதைக்கு இயல்பான ஓசை ஒழுங்கு உண்டு என்பதை வலிந்து மறுத்து, அது இதயத்துக்குரியது அல்லது உணர்ச்சிக்குரியது உயிர்ப்பானது என்பதை மறுத்து, அது இயங்கும் அசையும் பிறரைப் பிணிக்கும் அல்லது தொற்றும் தன்மையுடையது என்பதை மறுத்து, அதை வெறும் தட்டையான சிக்கல் மிகுந்த, புரிந்துகொள்ள முடியாத, மூளைக்கு, அறிவுக்குரிய, வரட்சியான, உயிர்ப்பிலாத, இருண்மை மிகுந்த, இறுகிய ஒரு பிரதியாக முன்னிறுத்தும் செயற்பாடுகள் நடந்துவருகின்றன..

தமிழ் கவிதை மரபின் இடைப்பட்ட ஒரு காலத்தில் கவிதை அர்த்தமற்ற சோடனைகளை, வார்த்தை ஜாலங்களை, வெற்று ஓசை வெளிப்பாடுகளைக் கொண்டு அரசவைகளிலும், அந்தப்புரங்களிலும், பண்டித பவனிகளிலும் முகமிழந்து கிடந்தது என்பது உண்மையே.

அது கவிதையின், கவிதை மரபின் குறைபாடல்ல.
உண்மையில் மரபை மீறுவது என்பது எங்கள் தலைமுறை உரிமையின் தனித்துவத்தைச் சிதைப்பது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

எங்கள் மண்ணின் மரபு வாழ்க்கை முறைகளுக்கு தொடர்பே இல்லாத விடயங்களை எம் வாழ்க்கை விழுமியங்களையே கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் தம் படைப்புகளில் செருகுகிறார்கள்.

எமது மண்ணோடு ஒட்டாமல், எமது வாழ்வோடு ஒட்டாமல், அதிமேதாவித் தனமாகச் சிந்திப்பதாகக் கூறிக்கொண்டு இருண்மை மிக்க, இலகுவில் புரிந்து கொள்ள முடியாத, பாலியல் வக்கிரம் மிகுந்த, படைப்புகளை தம் பரவச நிலையிலிருந்து படைப்பதாக இவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள்.

எங்கள் மரபுகளை முதுசங்களைப் பற்றி எள்ளளவும் அறியாமல், அவை பற்றி அறியவும் முனையாமல் சொந்த விருப்பு இரசிப்புகளை வெளிக்காட்டாது தாமே நவீனர்கள் என்று சொல்லித்திரிகிறார்கள்.

எமது கவிதை மரபு என்ற ஒன்றை நவீன கவிஞர்கள், விமர்சகர்கள் என்று சொல்லிக் கொள்வோர் ஏற்றுக் கொள்வதே இல்லை.

எமது மரபுகளில், எமது கலை வடிவங்களில், யாப்புக் கவிதை வகைகளில் தேவையற்ற காலங்கடந்து போன, தள்ளிவைக்க வேண்டியவை உள்ளன என்பதில் எந்த ஐயங்களும் இல்லை.

எந்தவித அவசியமுமின்றி வடிவங்களை உடைத்தல் அல்லத தகர்த்தல் என்ற ஒரேயொரு கொள்கையுடன கிளம்பிய பின்நவீனப் படைப்புகள், இறுதியில் ஓர்வடிவைச் சிதைத்து இன்னொரு வடிவத்தைப் பெற்றமையே யதாரத்தமாகியிருக்கிறது.

சூரனின் சேவல் மயிலானதுபோல் வடிவங்கள் மாறுமேயன்றி அவை சிதைக்கப்பட முடியாதவை.

எப்படி அக்காலக் கவிஞர்கள் தமக்குகந்த யாப்புகளில் எழுதியதை நாம் தவறு என்று கூறமுடியும்?


எப்படி தமிழ் மரபுக் கவிதைகளில் அபத்தங்கள் இருந்ததோ அதற்குச் சற்றும் குறையாத அளவு அபத்தங்கள் தமிழின் புதுக்கவிதைகளிலும் உள்ளன என்பதே மறுக்கமுடியாத யதார்த்தம்.

1. கவிதை என்பது வடிவம். அதுதான் உடல். கவிதையின் கருப்பொருளே உயிர். கருப்பொருளுக்கு இலக்கணம் இல்லை. உடலாகிய வடிவத்திற்கு இலக்கணம் உண்டு.

2. இது கவிதை எனப் பாமரனும் அறிவது அதன் வடிவத்தாலேயே!

3. கவிதை தனக்குரிய இலக்கணத்தை விட்டு விட்டால், கவிதைக்கும் உரைநடைக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும். உடைந்த வரிகளெல்லாம் கவிதையோ என்ற பிரமை தட்டும்.

4. கவிதை எழுதும் முன் உள்ளத்தில் அதன் உணர்வு வடிவமாகிய ஒட்டம் கிளம்பும். அதை இலக்கணத்திற்குட்பட்ட சொற்களில் வெளிப்படுத்துவதால்தான் கவிஞர், புலவர் என்றால் அக்காலத்தில் ஒரு பெரும் மரியாதை இருந்தது.



**கவிதையின் உயிராகக் கருதப்படும் ஓசையின் உருவாக்கத்தையொட்டி யாப்பிலக்கணம் வகுக்கப்பட்டது.**

**பல்வேறு இலக்கியங்களைப் பயின்ற பயிற்சியும், யாப்பிலக்கண அறிவும் உடையவர்களால் மட்டும் சிறந்த மரபுக் கவிதைகளைப் படைக்க முடியும்.**

அந்த ஓட்டத்தை இலக்கணத்திற்குட்பட்டு கவிதையாக வெளிப்படுத்த முடியாவிட்டால் உரைநடையாக எழுதலாம்.

மரபுக் கவிதையில் காணும் குறைகள்:

1. இலக்கணக் கட்டுப்பாடுகளால் எல்லோராலும் சட்டென கவிதை எழுதி விட முடியாது.

2.தற்காலத்தில் எழுதுபவர்கள் பலரும் இலக்கணத்திலேயே கவனம் வைப்பதால், கவிதையின் உள்ளிருக்கும் கருப்பொருள் மட்டமாக இருக்கிறது. கருப்பொருளில் கவனம் செலுத்துவதும் இல்லை. வார்த்தை ஜாலமே முக்கியமாக அமைந்து விடுகிறது.
3.கவிதை எழுத உள்ளே ஒரு இயல்பான ஓட்டம் கிளம்பும். அந்த ஓட்டத்திற்கு ஈடாக சொற்கள் வெளிவரும். அத்தகு சொற்கள் யாப்பு இலக்கணத்திற்கு உட்பட்டு அமைக்க முயலும்போது பெரும்பாலானோரின் அந்த கவிதை ஓட்டம் தடைப்பட்டு உயிரோட்டம் குறைந்த கவிதை தோன்றுகிறது.

4.இலக்கணத்திற்காக, எதுகை, மோனைக்காக சொற்களை தேடிப் போடும்போது பெரும்பாலான கவிதைகள் படு செயற்கையாக ஆகி விடுகின்றன.

5. மரபுக்கவிதைகளை விமர்சிக்கவே இலக்கணம் தெரிய வேண்டும் என்ற நிலை இருக்கிறது. கவிதை தண்டம் என்பது, ஓரளவு தமிழ் தெரிந்தவராலேயே அறிய முடியும்.

6.மரபுக் கவிதைகளில் பெரிய பிரச்சனை என்னவென்றால், முந்தைய காலக் கட்ட கவிதைகள் எதையுமே விமரிசிக்க முடியாது.

தோற்றமும் வளர்ச்சியும்
இலக்கியம் என்பது சமுதாயஉணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கலைவடிவமாகும். நுண்ணுணர்வால் அறிந்து நுகரத்தக்கது ஆதலின் இது நுண்கலையாகும்.

“சொல்லால் பொருட்கிட னாக உணர்வின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் (நூற்பா-268)
என நன்னூல் குறிப்பிடுகின்றது.

பல்வேறு இலக்கியங்களைப் பயின்ற பயிற்சியும், யாப்பிலக்கண அறிவும் உடையவர்களால் மட்டும் சிறந்த மரபுக் கவிதைகளைப் படைக்க முடியும்.

ஒவ்வொரு பாவகைக்கும் குறிப்பிட்ட ஓசை நயம் இருக்கிறது.
(1) வெண்பா - செப்பலோசை
(2) ஆசிரியப்பா - அகவலோசை
(3) கலிப்பா - துள்ளலோசை
(4) வஞ்சிப்பா - தூங்கலோசை

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கும் செய்யுளில் இடம்பெறலாம் என்கிறது தொல்காப்பியம்.

இவை செய்யுள் ஈட்டச் சொற்கள் என்று குறிக்கப்பெறுகின்றன.

(1) இயற்சொல் - பாமரர்க்கும் புரிவது
(2) திரிசொல் - படித்தவர்க்கே புரிவது
(3) திசைச்சொல் - வட்டார வழக்குச் சொல், பிறமொழிச் சொற்கள்
(4) வடசொல் - சமஸ்கிருதச் சொற்கள்

மரபுக்கவிதையின் தொடக்கமே, நாட்டுப்புறப் பாடல்கள்தாம் என்றும் கூறலாம்.

நாட்டுப்புறச் சாயலுடையனவேயாகும். சிலப்பதிகாரம், திருவாசகம், குறவஞ்சி, பள்ளு போன்றவை நாட்டுப்புறத் தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன.

கவிஞன் என்பவன் எதனையும் கூர்ந்து நோக்கும் இயல்புடையவன்.
அவன் எதனை எந்த நோக்கத்தில் பார்க்கின்றானோ அதுவே அவனுக்கு அதனைப்பற்றிய அறிவை ஈட்டித்தருகிறது.

எனவே உணர்ச்சிகளை இதமாகக்கொட்ட வேண்டும்.
பிறர் மனத்தில் பதியுமாறு நயமிகு நற்றமிழில் கொடுக்கவேண்டும்.
கவிதை எழுதுவதற்கு நிறையச் சொற்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
அவற்றின் வீரியத்தையும் உணர்ந்திருக்க வேண்டும்.

கவிதையின் உறுப்புகள் ஆறு.
அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன. .
தற்போது யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கணமே கவிதைக்கு உரிய இலக்கணமாகப் பெரிதும் கொள்ளப்படுகிறது.

இலக்கிய மரபு என்றால் அது செய்யுள் மரபையே குறிக்கும்.
எனவே எமது மரபு வழிவந்த, அதேநேரம் நவீனத்தை அல்லது புதுமையை நோக்கி நகர்கின்ற, காலஓட்டத்திற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய இயற்கையின் வாழ்வின் யதார்த்தத்தின் தீராத பக்கங்களை, அவற்றின் உண்மைகளை பேசக் கூடிய கவிதைகளை இனங்காண வேண்டியது அவசியமாகிறது.
சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும்.

பாரதியார் காலந்தொட்டு வரும் மரபுக்கவிதை படைப்பாளர்களும் அவர்தம் படைப்புகளும் குறிப்பிடத்தக்க சிறப்புடையனவேயாகும்.

(1) பாரதியார் - பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு
(2) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை - ஆசியசோதி, மருமக்கள்வழி மான்மியம்
(3) நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை - தமிழன் இதயம், கவிதாஞ்சலி
(4) பாரதிதாசன் - பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு
(5) கண்ணதாசன் - இயேசு காவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி
(6) சுத்தானந்த பாரதியார் - பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த் திருப்பாவை
(7) சுரதா - சிரிப்பின் நிழல், தேன்மழை, துறைமுகம்
(8) அழ.வள்ளியப்பா - மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி
(9) வாணிதாசன் - கொடி முல்லை
(10) வைரமுத்து - வைகறை மேகங்கள்

11/08/2018

# வீரம் விளைந்த தமிழ்.

உதிரத்தில் கலந்திருந்து உள்ளமெல்லாம் பூரித்திட.
உற்சாகமாக நிமிரச் சொல்லும் எங்கள் தமிழ்.
யாகம் செய்யும் வேள்வியிலே அருமருந்தாய்..
கம்பீரமாய் பற்றி எரியும் தீச்சுடரே செந்தமிழ்.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
முன் தோன்றிய மூத்த மொழியன்றோ.
செழும் பரிதியோடும் சிறப்பாக ஒளிரும்
மங்கா புகழ் கொண்டதெங்கள் மொழி.



திராவிட மொழிகளிலே மிகத் திருத்தத்தோடு
வடமொழி துணையின்றி தனித்தியங்கும்
திறன் படைத்து உச்சரிப்பில் ஒளிர்ந்திருக்கும்
தமிழெங்கள் மண்ணின் வீரம் கொண்ட மொழியன்றோ.

பொதிகையில் தமிழ் தந்த அகத்தியரும்
உருவத்திலே சிறியவரெனினும்
பயின்றிருந்தார் எங்கள்.
தமிழ் கடவுள் முருகனோடு இணைந்து
இலக்கியங்கள் எடுத்துரைக்க தமிழருமை புலர்கிறதே..

தமிழின் வீரத்தின் விளைநிலமே நம் புறநானூறு.
பதிற்றுப்பத்து உணர்த்திடுமே சேரமன்னன்
வாளெடுத்துப் வீசுகின்ற போர்க்களத்தின் நெறியதனை.
தமிழ்மகளிரும் வீரத்தில் சிறந்தவர்
என்றுணர்த்தும்.

மன்னர்கள் கால கல்வெட்டுகள் உணர்த்தியதே..
நம்தமிழை இலக்கிய நூல்களும் படிப்பித்ததே.
உரை அதிகம் கொண்ட திருக்குறளும் தமிழுணர்த்த.
திக்கெட்டும் தெறித்து நின்றதெங்கள் வீரத்தமிழ்.

**சுமிமுருகன்.**
**வில்லியனூர்.**



## வெளிவிருத்தப் பின்னல்
(என்மகனே பாரினிலே என்றென்றும் வெற்றிபெறு)

தாயெந்தன் தாலாட்டில் தான்மயங்கிக் கண்ணுறங்கும் - என்மகனே
சேயாக வந்துதித்துச் சீராடும் செல்வமன்றோ -என்மகனே
நீயென்றன் கலிதீர்க்க நித்திலமாய் வந்தவனோ - என்மகனே
வாயார வாழ்த்தட்டும் வானவரும் நீவாழ - என்மகனே..
கற்றிடணும் கல்விதனைக் கசடறவே என்மகனே - பாரினிலே
பெற்றிடணும் உயர்சிறப்பு பெருமையெலாம் என்மகனே - பாரினிலே
குற்றமிலா வாழ்வதனைக் கொண்டிடணும் என்மகனே - பாரினிலே
மற்றதெலாம் பெரிதல்ல மாண்பைவிட என்மகனே - பாரினிலே
அன்புடனே வாழ்தலன்றோ அறமாகும் பாரினிலே - என்றென்றும்
துன்புற்றோர்க் கீதலன்றோ துணிவாகும் பாரினிலே - என்றென்றும்
மன்றாடிப் பிழைப்பதெலாம் மதிப்பல்ல பாரினிலே - என்றென்றும்
வென்றிடத்தான் வாழ்க்கையிது வெற்றிபெறு பாரினிலே - என்றென்றும்.


**மதுரா**



## ஒரு விகற்ப நேரிசை வெண்பா

பங்குனி மாதத்தில் பாங்காய்த் திருவிழா
மங்காத சீர்கொண்ட மாதவனாம் - எங்களன்பு
சங்குசக்ர மேந்திய சந்தான கோபாலன்
தங்கக் குழந்தை சிறப்பு.
சுற்றும் இராட்டினங்கள் சொக்கவே வைத்திடக்
குற்றமிலா மாந்தர் குழுமியே - விற்றிடுவார்
சற்றும் அயராமல் சத்தமாய்க் கூவிடப்
பற்றிடுவார் மக்களும் பார்த்து
சிங்கமென வித்தையென சீறவைத்துக் காட்டுவார்
அங்கத்தைக் கூறாக்கி அஞ்சவைப்பார் - பங்கமிலா
கிங்கரராய் ஆழக் கிணற்றுக்குள் ஓட்டுவார்
பொங்குமே ஆச்சரியம் இங்கு.
கோலமிட்டு வாசலிலே கோபாலன் கண்டிட
ஆலமிட்டு வாழ்த்தி அணங்குகள் - மாலவன்
போலவொரு மாப்பிள்ளை பெற்றிட வேண்டியே
சீலமாய் நாடினர் சீர்.

**மதுரா**



# கனவு

கனவுகண்டேன் நான் கனவு கண்டேன்
காலங்கள் மாறிடக் கனவு கண்டேன்.

புத்தகப் பையினைத் தோளில் வைத்துப்
பொடிநடை போட்டிடக் கனவு கண்டேன்
மெத்தப் புதிய கார்களில் பிள்ளைகள்
மேன்மையாய் பள்ளி சென்றிடக் கண்டேன்.

கைவிளக்கு காாற்றினில் நூர்ந்திட நூர்ந்திட
கல்விப் பாடங்கள் கற்றிடக் கண்டேன்
மெய்வலி யின்றியே மேட்டிமையக
மின்விளக்கும் கதிரை மேசையுங் கண்டேன். !!! கனவு கண்டேன்...

துலாவை உழக்கித் துரிதமாய் நீர்பாய்ச்சி
தேகம் வியர்க்கத் தேடியகல்வியைக் கண்டேன்
நிலாவென வெள்ளை உடையது போட்டு
நித்தலும் படிப்பென நிற்பது கண்டேன்.

உத்தியோகம் பெரிதென உழன்றிடக் கண்டேன்
உலகெலாம் ஓடி ஓய்ந்திடக் கண்டேன்
உத்தியோக உயர்வு உதிர்ந்திடக் கண்டேன்
உலகினில் அனைவரும் ஊழியர் கண்டேன். !!!. கனவு கண்டேன்..

அண்ணன் தம்பி அன்பினைக் கண்டேன்
அண்ணன் தம்பி அடிபடக் கண்டேன்
வாக்கினை மதிக்கும் வல்லவர் கண்டேன்
வஞ்சனை நிறைந்த வழக்கங்கள் கண்டேன்.

நீதியும் நேர்மையும் நிறையவே கண்டேன்
நீதி செத்திட்ட நிலைகளைக் கண்டேன்
செயற்திறன் கொண்டவர் சிறந்ததைக் கண்டேன்
செப்படி வித்தைகள் செய்வோரைக் கண்டேன். !!.கனவு கணடேன்..

நாடுகள் பண்புடன் நடந்ததைக் கண்டேன்
நாணயமற்று நாடுகள் நலிவதைக் கண்டேன்
அணுசக்தி அற்ற அறத்தினைக் கண்டேன்
அமைதியைக் குலைத்த அணுவையும் கண்டேன்.

கனவகண்டேன் நான் கனவு கண்டேன்
காலங்கள் மாறிடக் கனவு கண்டேன்.

**வானொலி மாமா -நா.மகேசன்-**



## ஒற்றுமை

ஒற்றுமையாய் வாழ்வ தாலே
உலகில் சேரும் நன்மையே
வேற்றுமையை வளர்ப்ப தாலே
வீணே போகும் முயற்சியே.

யானை பார்த்த குருடர்போல்
யானை கண்ட வாதத்தால்
சேனை போட்ட முயற்சிகள்
சிதைந்து ஓய்ந்து போகுமே.

வேடன் விரித்த வலையினில்
வீழ்ந்த புறாக்கள் ஒன்றாக
கூடித் தூக்கிப் பறந்ததால்
குலத்தைக் காத்து வாழந்தன.

கறையான் புற்றைக் கட்டுமோ
கனத்த ஒற்றுமை இல்லையேல்
மறையன் மாடு வெல்லுமோ
மற்றச் சோடி நொண்டினால்.

தேனீ கூட்டைக் கட்டுமோ
தேனைத் தின்று தீர்த்திடில்
ஊனைக் குறைத்து ஒற்றுமையாய்
உழைக்கப் பழகா விடிலோ.

ஆணும் பெண்ணுமாக் குருவிகள்
அலைந்து கூட்டைக் கட்டுமோ
அன்பாய் ஒன்றாய் சுள்ளிகளை
அடுக்கிச் சேர்க்கா விடிலோ.

நாட்டைக் காக்கும் வீரர்கள்
நன்கு சேர்ந்து ஒண்றாக
வீட்டை மறந்து போர்செய்யாது
விட்டால் வெற்றி பெறுவரோ.

பொதுவில் சேரும் கூட்டங்கள்
பலரின் கருத்தை மதியாது
எதுவும் பிழையென் றிருத்திடின்
எடுத்த செயலும் தேறுமோ.

ஒற்றுமையாய் வாழ்வ தாலே
உலகில் சேரும் நன்மையே
வேற்றுமையை வளர்ப்ப தாலே
வீணே போகும் முயற்சியே.

**வானொலி மாமா நா மகேசன்**
சிட்னி
8.6.2018.



## "கவிஞன்"

பாடுகின்றோர் எல்லோரும் கவிஞரல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமையல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெடுத்த ஒளியால் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்குமாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞனாவான்.

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்து
பாடுகின்ற கவிதைகளும் பாராள் வேந்தர்க்
கஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்துபோகும்
கஞ்சியின்றி கந்தை சுற்றி வாழ்வானேனுங்
கனல்வீசி எரிமலைத்தீக் கக்கல்போல
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப்பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞனாவான்.

கற்கண்டே செழுந்தேனே கனியேயென்று
கலகலப்பாய் சுவைப் பெயர்கள் கலந்து நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதையெல்லாஞ்
சொன்னவர்க்குந் தெரியாமல் தொலைந்து போகும்
விற்கொண்டு விடும் வீரன் அம்பு போல
விசை கூடும் அறிவுப்போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோன்
சாற்றுகின்ற கவிதையென்றுஞ் சாதலில்லை.

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்கு மாரடிக்கின்ற மெல்லியர் போல்
சும்மாயோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்துச்
சொன்மாலை தொடுக்கின்றோர் கவிஞரல்லர்
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கி நிற்போர் கவிஞராவார்.

பாட்டிற்கோர் புலவனென்றே தமிழ்நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கையின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்புவோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதினாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்

**வித்துவான் வேந்தனார்**

# மது ஒழிப்பை ஊக்குவிப்போம்.

தாய்நாட்டில் வாழ்ந்துவரும் மக்கள் தம்முள்
சரிபாதி பெண்ணினத்தார் இன்னும் சொல்லின்
சேய்நிலையில் உள்ளோர்கள் நோயுற்றோர்கள்
சேர்த்திட்டால் அதிகம் மிகு விழுக்கா டாவார்
தேய்ந்துவரும் எஞ்சியுள்ளோர் எண்ணிக்கையில்
சிறுபகுதி ஆடவரே குடிப்பழக்கம் கொண்டவராம்
ஆய்ந்திடுதல் சிறிதுமின்றி அவர்கள் தமக்காய்
எதற்கு மதுவிலக்கை அமுலாக்க மறுப்பதுவோ.
எதிர்காலம் எம்நாட்டை ஏற்றுமே ஆளவல்லார்
இளைஞரெல்லாம் மது உண்டு அறிவு மயங்கிப்
புதியதொரு பொன்நாடு படைப்பதற்கு ஏற்றதொரு
புத்துணர்வு முற்றுமற்றுத் தம்முடல் இற்றேபோக
சதியாளர் வீதியெங்கும் சாராயக்கடைகள் தோன்ற
சற்றும் தயங்காது ஊர்கள் தோறும் உதவுவதும்
விதியிதுவோ எனஏங்கி மனம்நோக விதவிதமாய்
விற்கின்றாரே போதை வதைப் பொருட்களையும்
கட்குடித்தல் தீதென்று கற்றசான்றோர் தேர்ந்தன்று
கடுகளவும் உடலுக்கும் உள்ளத்துக்கும் உதவாது
கெட்டதுபோதை என்றேபல பாட்டுக்களில் எழுதியே
கருத்துடன் நூல்களிலே நாம்கற்றிடவே வைத்தார்.
பட்டதுயர் போதுமினி விட்டிடுவோம் மதுவையென்று
பண்புள்ளம் கொண்டவராய் நாம்நிமிர்ந்த பராயத்தில்
திட்டமிட்டு கொண்டுவந்தே திணிக்கின்றார் போதைத்
தந்திரத்தை இதைப் புரிந்தேயுணர்ந்து திருந்திடுவீர்.

அந்தமில்லா தீயபல அனியாயங்கள் தினமுமாற்ற
ஆர்வம்மிகத் தூண்டும் இந்தப் போதைப் பாவிப்பு.
ஏந்திளையார் பெண்களவர் காத்தகற்பை பறித்தே
ஈனமிக வல்லுற வாடுதலும் இணைந்தே இளைஞர்
சிந்தை மழுங்கியே பயித்தியமாய்ச் சினந்துபலவும்
செய்வதற்கு போதைபருகுவதும் பெரும் காரணமாம்
சந்ததியை எம் செந்தமிழர் தேசமதை மீட்டிடவே
சேர்ந்தே மதுவொழிப்புத் திட்டமதை ஊக்கிவியும்.

*ந. கிருஷ்ணசிங்கம்.*

# நல்லாரோடு இசைந்திருத்தல் நன்றே!

நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்று
   நல்வார்த்தை பகர்ந்தளித்தாள் அவ்வை அன்று.
சொல்லாலும் செயலாலும் மேலோர் தம்மைத்
   துணையாக, நட்பாகக் கொள்ளல் வேண்டும்!
பொல்லாதார் உறவென்றும் புன்மை காண்பீர்!
   புகையெழுப்பி அனல்வீசும் காட்டுத் தீயும்
நல்வாசம் வீசுகின்ற சந்தனத் தோப்பை
   நலிவடைய வெந்துபடச் செய்தல் போலாம்!



வலியாரை நாடிநின்று வலிந்து நட்பை
   வளர்த்தல்தாம் மதியன்று, சிந்தை கொள்க!
மெலியாரை விலக்கிநின்று வேறு காணல்
   மிகக்கொடிதே! மேதினியில் பகுத்துப் பார்த்தால்
பலம்கொண்ட யானையது மூர்க்கம் கொண்டு
   பாகனையே பழிதீர்க்கும் கதைகள் உண்டு!
நலம்பேணும் வீட்டிலுளோர் விரட்டிக் கல்லால்
   நாயதனை அடித்தாலும் நன்றி காட்டும்!

நல்வழியில் ஞானத்தில் திளைக்கா தோரை
   நண்ணிடவே அஞ்சிடுவர் ஆன்று டையோர் !
வல்லபெரும் வாய்மைநிறை மாந்தர் தம்மை
   வலிமையற்றோர் நாடுதலால் ஏற்றம் கொள்வர்!
புல்பூண்டு, புழுக்கள்சேர் அழுக்கு நீரும்
   புவிநீக்கிச் சமுத்திரத்தில் கலக்கும் காலை
மெல்லெனவே தன்மையது வேறில் லாது
   மீட்சியிலாக் கடல்நீராய் மாறிப் போகும்!

குழுவிலிருப் போரெல்லாம் நல்லவ ரென்றே
   குற்றமில்லா நெஞ்சத்தோர் குலவிச் சேர்வர்!
பழுதில்லா உள்ளத்தோர் அவர்தாம் என்றே
   பார்வையினால் முடிவெடுத்தல் நன்றே யன்று!
செழுமைமிகு தாமரையும் சேர்ந்து வாழும்,
   சீர்குளத்து ஆம்பல்பூக் கூட்டம் தன்னில்.
ஒழுக்கமிகு மானிடரின் உறவிருந் தாலும்
   ஒப்புரவு இல்லாதார் உய்யார் அன்றோ?

நட்பென்றும் உறவென்றும் உரிமை கூறி
   நயம்படவே உரைத்தெம்மை நண்ணி நிற்பர்.
கட்புலனால் அறிந்திடாத கருமம் ஆற்றிக்
   காலத்தில் தீங்கிழைக்கும் கபடம் செய்வர்.
ஒட்டுண்ணிக் குருவிச்சை இனமும் கூட
   ஒய்யார விருட்சங்கள் தம்மில் ஊன்றிப்
பட்டுவிடச் செய்துவிடும், பரந்து சுற்றிப்
   பாங்கான வளமெல்லாம் கொள்வ தாலே!

பறவைகளில் விலங்குகளில் ஒட்டி வாழும்
   பாதகம்செய் உயிரினங்கள் உடலிற் தங்கி
உறிஞ்சிவிடும் குருதியெலாம்: உயிரும் நீங்க
   உதறியுடல் விட்டகன்று கழன்று போகும்.
செறிவுடனே உறவாடி வருவோர் தாமும்
   செல்வமின்றி வறுமையது வந்த காலை
உறவறுத்து விலகிடுவார், உலகிற் காண்பு.
   உண்மைநிலை இதுவன்றோ? உணர்விற் கொள்வீர்!

*கவிதாயினி பவானி தர்மகுலசிங்கம்*
*கனடா*

## *திசைகளை மாற்று துணிந்து!*

எண்சாண் அடக்கத்துள் எண்ணியதை ஏற்றிவைத்து
மண்ணுக்காய்ச் சேர்த்திடும் மானியமேன் – பண்படுத்து!
எண்ணும் பொழுதினில் இல்லாமற் போய்விடும்
ஒண்மைக் கவியிதை ஓது!

ஆறுடன் நான்கு அமைகின்ற மாதத்தில்
வேறுவழி செல்லாமல் வெற்றிகாண் –ஆறுதலாய்
நூறுமுறை சிந்தித்து நோக்கத்தைச் செய்யவே
ஏறிடும் வாழ்க்கை இலக்கு!

பொல்லாத எண்ணம் பொடியாக்கு! பார்தனிலே
இல்லாத நற்புதுமை ஈந்துவிடு! –நல்லோர்கள்
சொல்லாத நீதிகளைச் சொல்வதற்கு முன்னே..நீ
வல்லமை சேர்த்து வணங்கு!

கல்லுள்ளே ஈரம் கசிவதுபோல் உள்ளத்துச்
சொல்லுள் கனிவாகச் சொல்லுவோம்! – பொல்லாப்பே
இல்லாமற் போகும்! எடுத்தியம்பும் நல்லதோர்
சொல்லில் நயக்கும் சுகம்!


துன்பந் தரும்பொருளைத் தொட்டாலும் பாவமே!
பின்னதனை நாடுவதும் பீடையே! – நன்றாக
இன்பந் தரும்பொருளை எண்ணி உழைத்திடுவாய்!
என்றும் பெறுவாய் எழில்!

நல்வாழ்வு பூக்கும்! நலமுடனே நற்பணிசெய்
இல்வாழ்வும் ஓங்கும் எழில்கொண்டு! –சொல்லாலே
நல்லுலகில் ஆற்றுகின்ற நற்செயல்கள் சீர்மிகவே
எல்லோரும் வாழ்வார் இனித்து!

**நெய்தல் நாடன்**

## சுமைகள்

கனவுகளைச் சுமந்து காலங் கழிகிறது
நினைவுகளைச் சுமந்து நேரம் நீழ்கிறது
வாழ்க்கையைச் சுமந்து மனிதம் வருந்துகிறது
போர்களைச் சுமந்து உலகம் மாழ்கிறது



சுமைகளால் சுகங்கள் மாழும்
சுகங்களால் பெறுவ தென்ன ?

வீடும் வாசலும் வருந்திச் சேர்க்கிறோம்
நோயும் துன்பமும் கூடவே சேர்கின்றன
பழியும் பாவமும் பாராமல் நடக்கிறோம்
பஞ்சமா பாதகம் பதறாமல் செய்கிறோம்

இவை சுகம் நோக்கிய சுமைகளா
அன்றி விரைவான விடுதலைக்கா ?

நீதிக் கதைகளை நீண்ட காலமாய்ப் படிக்கிறோம்
அருளுரைகளை ஆண்டாண்டாய்க் கேட்கிறோம்
ஆண்டவனையும் ஆர்வமாய்த் தொழுகிறோம்
ஆலயங்களுக்குத் தவறாமற் போகிறோம்
ஆனால் எமது சுமைகளைக் குறைத்தோமா ?

வாழ்வில் வழி நெடுகச் சுமைகள் சேர்க்கிறோம்
வழியைக் கடக்க முடியாமல் வருந்துகிறோம்
இலக்கை அடையமுடியாமல் இடையில் மறைகிறோம்
இதை உணர்ந்து சுமைகளைக் குறைத்தோமா ?

*துறையூரான்*

# ஒழிக்க வேண்டும்

கற்றவர் ஒன்று கூடி
கருத்தினைப் பேச வேண்டும்
ஒற்றுமை யின்மை யாலே
உரிமையை இழக்க லானோம்
பெற்றது என்ன வென்று
பட்டியவிட்டுப் பார்ப்போம்
சுற்றமும் நட்புங் கூட
சுருங்கித் தனிமை யானோம் !

ஏழ்மையி லுழலும் மக்கள்
ஏக்கத்தைப் போக்க வேண்டும்
ஊழ்வினை என்று வீணே
ஒதுங்கியே நிற்பா ரிங்கே
ஆழ்மன வேட்கை மற்றும்
அறிவுசால் தாக்கம் எல்லாம்
சூழ் நலம் அற்றுப் போக
சுயநலம் தலையைத் தூக்கும் !

புதவிகள் தேடிச் சென்று
பட்டங்கள் கட்டிக் கொள்வார்
உதவிடும் நெஞ்சந் தன்னை
உரித்துமே கழற்றி வைப்பார்
பதவியே போது மென்று
பண்பினை ஒதுக்கி வைத்து
நிதமொரு வேடம் போடும்
நீசரை ஒழிக்க வேண்டும்

மா. இராமையா

